1972 மார்ச் 22]

High Level Committee for Madras Corporation.

* 622 *Q.*—DR. H. V. HANDE: Will the Hon. Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that the Government have appointed a high level official committee to enquire into the fiscal and administration structure of the Corporation of Madras and suggest ways and means for augmenting the civic bodies, finances;

(*b*) if so, whether that committee has submitted its recommendations; and

(*c*) the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்;

(இ) ஆம்.

(உ) அறிக்கை அரசு பரிசீலனையில் உள்ளது.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, அந்த உயர் மட்டக் குழு மாநகராட்சி நடத்துகின்ற உயர்நிலைப்பள்ளிகளுக்கு கூடுதலான செலவினங்கள் ஏற்படுகிற காரணத்தால் பொருளாதார இக்கட்டு ஏற்படுகிறது என்றும், அத்தகைய பள்ளிக்கூடங்கள், உயர்நிலைப் பள்ளிக்கூடங்கள் ஆகியவற்றை அரசே ஏற்று நடத்த வேண்டு மென்றும் ஏதாவது அவர்கள் தெரிவித்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்தக் குழுவினர் பல்வேறு நிதி வசதி, பல்வேறு சூழ்நிலை, அதை மாற்றியமைப்பது பற்றியும், பல்வேறுவிதமான கருத்துக்களைப்பற்றியும் அரசாங்கத் திற்கு அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார்கள். பல்வேறு துறைகளில் கலந் தாலோசித்து முடிவு எடுக்க வேண்டும். அமைச்சரவையில் வைத்து அந்த முடிவு எடுக்க வேண்டும். அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இப்போது இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்த கருத்துக்களும் இருக்கக்கூடும். அதைச் சரியாகச் சொல்வதற்கு இப்போது தகவல் இல்லை. முழுப் பரிசீலனை முடிந்த பிறகு அந்த அறிக்கை இந்த அவை முன் வைக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS